# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை வாபஸ் செய்து பாரிய அளவில் நிகழும் உரிமை மீறல்களுக்கு முற்றுப் புள்ளி இடவும்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினைத் தொடர்ந்தும் செயற்பாட்டில் வைத்திருப்பதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை. மாறாக அதனை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்பதற்கு பல மறுக்க முடியாத காரணங்கள் உள்ளன.

நான்கு மாதங்களிற்கு முன்னர் LTTE யினரை தோற்கடித்து விட்டதாக அரசு பிரகடனப்படுத்தியது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பிரகடனப்படுத்தி அதனை நடைமுறையில் வைத்திருந்ததை, LTTE யினர் நிலை கொண்டிருந்து ஈனு இரக்கமற்ற வன்முறையில் ஈடுபட்டதை காரணம் காட்டி அரசு நியாயப்படுத்தியது. தற்சமயம் அரசின் கூற்றிற்கமையவே அவ்வகையான வன்முறைக்கான அச்சுறுத்தல் ஓய்ந்து விட்டது. ஆகவே தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நடைமுறையில் வைத்திருப்பதை நியாயப்படுத்த எக்காரணமும் இல்லை.

LTTE யினர் ஏற்படுத்திய பாரிய அச்சுறுத்தலின் பின்னணியில் கூட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் கொடூரமானவை எனக் கருதப்பட்டது. குறிப்பிட்ட வகையிலான அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும் கூட இச்சட்டத்தின் விதப்புரைகள் நியாயப்படுத்தக் கூடியதாக இருந்ததில்லை. இது இவ்வகையிலானது என்பதை உள்ளூர் சட்ட வல்லுனர்களின் கருத்தும், உள்ளூர் மனித உரிமைகள் ஆர்வலர்களின் குழுக்களும், உலகின் பல்வேறு அரசுகளும், பல ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முகவர் அமைப்புக்களும், நிபுணர்களும், பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே இச்சட்டத்தை நியாயப்படுத்துவதற்கான காரணம் அற்றுப் போயுள்ளமையால் இக்கொடூரச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க எந்தவொரு அடிப்படையுமில்லை.

LTTE யுடன் தொடர்புள்ள பலரும் அவ்வகையிலான சில புதிய அமைப்புக்களும் உருவாகலாம் எனக் காரணம் காட்டி குறித்த சட்டத்தை தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதை நியாயப்படுத்துகின்றார்கள். இவ்வகையான நிலைமை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் எல்லா நாடுகளும் எதிர்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இக்காரணத்தின் அடிப்படையில் சாதாரண சட்ட ஒழுங்கு முறைக்கு அமைய செயற்படுவதை இடை நிறுத்த இதனைக் காரணமாகக் கொள்வதெனில் எல்லா நாடுகளும் எல்லாச் சமயங்களிலும் இவ்வகையான சட்டங்களை நடைமுறைப்படுத்தத் தேவையேற்படும். பயங்கரவாத அமைப்புக்கள் மாத்திரமன்று உலக யுத்தங்கள் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகையிலான ஒரு வாய்ப்பு உள்ளது என்று கூறி மக்கள் தங்கள் சுதந்திரங்களை இழந்து சாதாரண சட்ட ஒழுங்குகளிற்கமைய செயற்படுவதையும்

இழக்க நேரிடுமாயின் குறித்த வகையிலான கொடூர சட்டங்களில் இருந்து அவர்களை பாதுகாக்க முடியாது போகும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடாந்து நடைமுறையில் இருக்குமேயானால் அதில் இருந்து அரசியல் அனுகூலங்களைத் தாம் பெறுவதற்காகவே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அரசு நடைமுறையில் வைத்திருக்கின்றது என்று குற்றம் சுமத்தவும், நியாயப்படுத்தக்கூடிய ஐயம் ஏற்படவும் இடமளிக்கின்றது. தனது அதிகாரத்தை செலுத்த பயங்காரவாத தடுப்புச் சட்டத்தை அரசு ஒரு கருவியாக பயன்படுத்துகின்றது என அனுமானிக்க இடமளிக்கின்றது. எதிர்கட்சியில் உள்ளவர்களும் அரசின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக்களை கொண்டவரும் தங்கள் எதிர்பார்ப்பையும் மாற்றுக் கருத்துக்களையும் அடக்க அரசு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்துகின்றது என்று நியாயப்படுத்தக் கூடிய வாதத்தை முன் வைக்கக் கூடியதாக உள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக நாட்டினுள் வழமையான சட்டத்தின் ஆதிக்கத்திற்கு அமைவான செயற்பாடுகளை அழிக்கவும் நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு பங்கம் ஏற்படுத்தவும் இடமளித்தது. அதன் விளைவாக வழமையான சட்டத்தின் ஆதிக்கத்திற்கு அமைவான ஒழுங்கு முறைகள் எவ்வகையிலானது என்பதனை வழக்காளிகளும், சட்டத்தரனிகளும், நீதிபதிகளும் கூட மறக்க ஆரம்பித்து இருப்பார்கள். பயங்கரவாத தடுப்புச் சட்டம் எல்லாப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் சட்டத்தின் ஆதிக்கமும், நீதித்துறையின் சுயாதீனத் தன்மையும் பாரிய அளவில் பாதிப்புற்றுள்ளன. தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நடைமுறையில் வைத்திருப்பது என்பது அதன் பாதகமான விளைவுகளை தொடரவிடுவதற்கு ஒத்ததாகும். ஆகவே அரசின் பேச்சாளர் கூறுவது போல ஏற்படும் சிறு அனுகூலங்களிற்கு பதிலாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்துவதனால் ஏற்படும் பிரதிகூலங்களும், பாதகமான பாரிய விளைவுகள் ஏற்படும்.

தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பது குற்றவியல் புலனாய்வுப் பிரிவும், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவும் சட்டத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அமைப்புக்களாகிவிடும். இவ்வமைப்புக்களுக்கு பெருமளவு அதிகாரங்களை பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் அளித்துள்ளமையால் அவைகள் தமக்குள்ள அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதைக் கட்டுப்படுத்த செயல்வலுவுள்ள எந்த வழியுமே இல்லை. அவர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதை செய்யப்படுவதாகவும், வேனுமென்றே அவர்கள் மரணிக்க செய்யப்படுவதாகவும் அடிக்கடி கேள்விப்படும் விடயமாகும். எனவே பயங்கரவாத தடுப்புச் சட்டம் நடைமுறையில் இருக்கும் வரை இவ்வகையான நிகழ்வுகளே தவிர்த்துக் கொள்ள வழி இல்லை மாத்திரமன்றி இவை தொடர்பான புகார்களைக் கூட புலனாய்வு செய்ய முடியாத நிலை உள்ளது.

இலங்கையில் பொலிஸ் ஒழுங்கு முறைகள் செயலற்றுப் போயுள்ளன என்பது யாவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு விடயமாகும். இவ்வமைப்பை புனரமைப்புச் செய்வதற்கு பயங்கரவாத தடுப்புச் சட்டம் நடைமுறையில் உள்ள காலம் வரை நடைமுறைப்படுத்த முடியாத ஒரு விடயமாகும். அப்படியெனின் பாரதூரமான அளவிற்கு செயலற்றுப் போயிருக்கும் பொலிஸ் ஒழுங்கு முறை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து கொண்டேபோகும். அதன் விளைவாக மக்கள் அடக்கு முறைக்குட்பட்டும் ஊழல் மோசடிகள் மத்தியில் நியாயப்படுத்த முடியாத செயல்கள் மத்தியிலும் வாழ நேரிடும்.

இவை எல்லாவற்றின் விளைவு ஆயிரக்கணக்கானோர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் பாதிப்புற்ற நிலையில், அதற்கு சட்டத்தினால் எந்த நிவாரணமும் பெற முடியாத நிலை ஏற்படும். அதன் பொருள் யாதெனில் பெருமளவிலான மக்கள் சட்டத்தின் பாதுகாப்பு அற்ற நிலையில் வாழ நேரும் என்பதே. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினால் ஏற்படும் தாக்கம் இந்நாட்டு மக்கள் யாவரது வாழ்விற்கும் மேற்கூறப்பட்ட பாதகங்களை ஏற்படுத்தும்.

ஆகவே இலங்கை வாழ் மக்கள் யாவரும் அதன் வெளியில் வாழும் இலங்கையரோ அல்லது ஏனையோரோ பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று அரசாங்கத்திடம் காத்திரமாக வேண்டுகோள் விட வேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள அதி விசேட அதிகாரங்களை பயன்படுத்துவதன் மூலம் நீதித்துறையினை வலுவிழக்கச் செய்து சாதாரண சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அந்நீதித்துறையினர் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வழி வகைகளை செய்து உதவுவதற்கு இச்சட்டம் இடமளிக்காதுள்ளது.

## *உத்தேசக் கடிதம்*

நெடுநாட்களாக இலங்கை மக்கள் அனுபவித்து வரும் பாரியளவிலான துன்பங்களை மிகுந்த கவலையுடன் நான் அவதானித்து வந்துள்ளேன். LTTE யினரை தோற்கடித்துவிட்டதாக அரசு பிரகடனப்படுத்தியதும் இந்நாட்டின் எல்லா மக்களுக்கும் சமாதானம் ஏற்படும் என்றும், அவர்களுக்கு சட்டத்தின் பாதுகாப்புக் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்தேன். தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பதன் மூலம் இவ் எதிர்பார்ப்பில் ஏமாற்றம் அடைந்தேன். மக்களின் உரிமைகள் மறுத்து குறித்த கொடூர பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை நியாயப்படுத்தாத முறையில் நடைமுறைப்படுத்தி மக்களைத் தொடர்ந்தும் துன்பத்திற்கு உள்ளாக்குவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடிாயத ஒரு விடயமாகும்.

இச்சட்ட ஏற்பாடுகள் தர்க்கரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை. அத்துடன் சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்ற ஒழுங்குகளைக் கொண்டுள்ளது. மேலும் சட்டத்தின் ஆதிக்கத்தை நியாயப்படுத்தக் கூடியவகையில் நடைமுறைப்படுத்துவதற்கான கோட்பாடுகளிற்கும்

முரணானவையாகும். இவ்வகையிலான கொடூரச் சட்டத்தின் கீழ் வாழ்வது என்பது நரக வாழ்க்கைக்கு ஒத்ததாகும். இச்சட்டங்களினால் விசேடமாக பாதிப்புற்றோர் உள்ளர். அவர்கள் எந்த வகையிலான மனிதாபிமான முறையிலான பராமரிப்பினையோ சட்டப் பாதுகாப்பையோ பெற முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே இந்நாட்டு மக்கள் அனுபவிக்கும் பாரிய துன்பத்தில் இருந்து உடனடியாக அவர்களை மீட்டு எடுத்து நாட்டின் சாதாரண சட்டத்தின் செயற்பாட்டை மீள ஏற்படுத்தி சட்டத்தின் பாதுகாப்பை அவர்களுக்கு அளிக்கக் கூடிய வகையில் நீதித்துறைக்கு அதிகாரத்தை வழங்கி ஒரு ஜனநாயகத்தின் கீழ் அத்துறையினரிடம் இருந்து எதிர்பார்க்கும் பொறுப்பை நிறைவேற்ற இடமளிக்குமாறு ஸ்ரீலங்கா அரசிடம் வன்மையாக வேண்டுகின்றேன்.

************